## உயர் அழுத்த மின்சாரம் தாக்கியதால்

# இதய துடிப்பு நின்று போன இளைஞர் நவீன சிகிச்சை மூலம் பிழைத்தார்



உயர் அழுத்த மின்விபத்தால் பாதிக்கப்பட்ட பாலாஜிக்கு மியாட் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றி விளக்குகிறார் டாக்டர் நிசீத். அருகில், மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ்.

**சென்னை, மார்ச் 29:** சென்னையில் உள்ள மியாட் மருத்துவமனையில் உயர் அழுத்த மின்விபத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞருக்கு அதிநவீன சிகிச்சை (தெரபிட்யூட்டிக் ஹைபோதெர்மியா) மூலம் குணமாக்கப்பட்டுள்ளது.

சிகிச்சை மேற்கொண்ட மியாட் மருத்துவமனையின் டாக்டர் நிசித் தலைமையிலான குழுவினர் சென்னையில் நேற்று கூறியதாவது:

சென்னை ராமாபுரத்தை சேர்ந்தவர் பாலாஜி (28). நடன கலைஞர். இவர் புதியதாக தொடங்கவுள்ள நடனப் பள்ளியில் 'பிளெக்ஸ் போர்டை' பொருத்தும் போது, திடீரென உயர் அழுத்த மின்சாரம் பாய்ந்தது. மிகவும் ஆபத்தான நிலையில் அவரது சகோதரரும், நண்பர்களும் எங்களை தொடர்பு கொண்டனர். 15 நிமிடங்களில் மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். ஆம்புலன்சிலேயே ஆரம்பகட்ட சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவமனைக்கு வந்த பிறகு சுமார் 15 நிமிடங்களாக அவரிடம் சுவாசம் இல்லை, அவரது இதயம் துடிக்கவும் இல்லை.

இதனை தொடர்ந்து அவரை அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர்கள் கடினமாகவும், வேகமாகவும் அவரது மார்புக் கூட்டினை அழுத்தினர். மின் அதிர்வு சிகிச்சையும் வழங்கப்பட்டது. 10 நிமிட போராட்டங்களுக்கு பின், அவரது இதயம் மீண்டும் துடிக்க தொடங்கியது.

ரத்த அழுத்த நிலை ஓரளவு சீரான நிலையில், மீண்டும் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. மருத்துவர்கள் தொடர்ந்து முயற்சித்தனர். மீண்டும் இதயம் துடிக்க வைக்கப்பட்டது.

தமனிகள் மற்றும் முக்கியமான நாளங்கள் கேன்யுலேட் செய்யப்பட்டன. உறை வெப்பநிலை திரவம் செலுத்தப்பட்டன. பின்னர் அவரது உடல் ஐஸ் கொண்டு பேக் செய்யப்பட்டு, வெப்பநிலை 92 டிகிரி எப் அளவுக்கு கீழ் கொண்டு செல்லப்பட்டது. இந்த சிகிச்சைக்கு தெரபிட்யூட்டிக் ஹைபோதெர்மியா என்று பெயர்.

இந்த சிகிச்சையினால், மூளை செயல்பாடுகளை குறைப்பதனால், மூளை சேதமடைவதை தடுக்கும் சாத்தியத்தையும் கொண்டு உள்ளது. 6 நாட்களுக்கு பிறகு அவர் கண்களை திறந்தார். நல்ல அறிகுறியாக இருந்தது. இந்நிலையில் அவருக்கு தொடர்ந்து வலிப்பு ஏற்பட்டது. பின்னர் ஒரு புத்தாக்க மருந்து வினியோக முறையை மருத்துவர்கள் செயல்படுத்தினர். அதன்பிறகு வலிப்பு நின்றது. 20 நாட்களுக்கு பிறகு அவரால் பேச முடிந்தது. 3 வாரங்களுக்கு பிறகு முழு சுயஉணர்வுடன், கைகளை முழுமையாக பயன்படுத்தும் திறன் பெற்றார். தற்போது பூரணமாக குணமடைந்து விட்டார். இவ்வாறு அவர் கூறினார்.

சிகிச்சை பெற்ற இளைஞர் பாலாஜி கூறுகையில், "கடந்த பிப்ரவரி 5ம் தேதி எங்கள் வீட்டு மாடியில் நடன பள்ளி திறப்பதற்கான பணியில் நண்பர்களுடன் ஈடுபட்டு இருந்தேன். அப்போது பிளெக்ஸ் போர்டை பொருத்தும் போது திடீரென ஷாக் அடித்தது. இதன் பிறகு, என்ன நடந்தது என்றே எனக்கு தெரியாது. பின்னர், நடந்ததை பற்றி நண்பர்களிடம் கேட்டு தான் தெரிந்து கொண்டேன். என் உயிரை காப்பாற்றிய அனைவருக்கும் நன்றி. தற்போது வெற்றிகரமாக நடனப்பள்ளியை திறந்து விட்டேன். வரும் டிசம்பர் மாதம் நடக்கவுள்ள நடன போட்டியில் நடனமாட உள்ளேன்'' என்றார். இந்த சந்திப்பின் போது, மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன் தாஸ், டாக்டர்கள் பலர் உடன் இருந்தனர்.